**செய்தி வெளியீடு எண்:466** **நாள் :12.09.2014**

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

குடும்ப அட்டையில் மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னையில் உள்ள 16 மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் செப்டம்பர் 2014 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்ட முகாம் 13.09.2014 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி உள்ள குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப அட்டைகளில் பெயர், முகவரி மாற்றம், திருத்தம் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | சென்னை நடுநிலைப்பள்ளி, 246, தங்கசாலை (தெற்கு) சென்னை 600 003 (தென்னக இரயில்வே அலுவலக பின்புறம்) |
| 2 | இராயபுரம் | சென்னை மாநகராட்சி தொடக்க பள்ளி, 80, சேனியம்மன் கோயில் தெரு, தண்டையார் பேட்டை, சென்னை 600 081. (சின்ன ஸ்டான்லி மருத்துவமனை அருகில்) |
| 3 | பெரம்பூர் | சென்னை மாநகராட்சி தொடக்கப்பள்ளி, ஜி.கே.எம்.காலனி, 12வது தெரு, சென்னை –82 ( பிள்ளையார் கோயில் அருகில்) |
| 4 | அண்ணாநகர் | சென்னை உயர்நிலைப்பள்ளி, கீழ்ப்பாக்கம் தோட்டசாலை, கீழ்ப்பாக்கம், சென்னை 600 010 (ESI மருத்துவமனை பணியாளர் குடியிருப்பு அருகில்) |
| 5 | அம்பத்தூர் | சென்னை தொடக்கபள்ளி, பள்ளிக்கூட தெரு, முகப்பேர் மேற்கு, சென்னை 600 037. (விஜயா வங்கி அருகில்) |
| 6 | வில்லிவாக்கம் | சமுதாய நலக்கூடம், சிட்கோ நகர், 4வது மெயின் ரோடு, வில்லிவாக்கம், சென்னை 600 049. (வாட்டர் டேங்க் அருகில்) |
| 7 | திருவொற்றியூர் | நேரு மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, டி.எஸ்.ஆர்.நகர், திருவொற்றியூர், சென்னை –19. (சுபம் மருத்துவமனை அருகில்) |
| 8 | ஆவடி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சூரப்பட்டு, புழல், சென்னை 600 066, (பஞ்சாயத்து அலுவலகம் அருகில்) |
| 9 | தி.நகர் | அரசு மேல்நிலைப்பள்ளி, செட்டிதெரு, போரூர், சென்னை–116. (போரூர் சிக்னல் அருகில்) |
| 10 | மயிலாப்பூர் | பி.எஸ். மேல்நிலைப்பள்ளி, 215 ஆர்.கே.மடம் சாலை, மயிலாப்பூர், சென்னை–4. (இராமகிருஷ்ணா மடம் எதிரில்) |
| 11 | பரங்கிமலை | புனித மார்க்ஸ் மேல்நிலைப்பள்ளி, 110, ராதாநகர் மெயின் ரோடு, குரோம்பேட்டை, சென்னை–44. |
| 12 | தாம்பரம் | ஊராட்சி மன்ற அலுவலகம், திருவஞ்சேரி, சென்னை –126. (லட்சுமியம்மாள் பொறியியல் கல்லூரி, அகரம் மெயின் ரோடு அருகில்) |
| 13 | சைதாப்பேட்டை | பாய்ஸ் கிளப், வெங்கடாபுரம், சைதாப்பேட்டை, சென்னை 15. (சைதாப்பேட்டை நீதிமன்ற வளாகம் எதிரில்) |
| 14 | ஆயிரம்விளக்கு | சென்னை நடுநிலைப்பள்ளி, 20, மேயர் சத்தியமூர்த்தி சாலை, எம்.எஸ்.நகர், சேத்துப்பட்டு, சென்னை–31. (சேத்துப்பட்டு ரயில் நிலையம் அருகில்) |
| 15 | சேப்பாக்கம் | சென்னை நடுநிலைப்பள்ளி, 10, பாலாஜி நகர் 3–வது தெரு, ராயப்பேட்டை, சென்னை–14. (மீர்சாகிப் மார்க்கெட் பின்புறம்) |
| 16 | சோழங்கநல்லூர் | பெரும்பாக்கம் ஊராட்சி அலுவலகம், பெரும்பாக்கம், சென்னை –100. (பெரும்பாக்கம் பேருந்து நிறுத்தம் எதிரில்) |

ஆணையாளருக்காக

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**